க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9092604488.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2016
# பத்தாம் வகுப்பு தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – I

**பகுதி – 1 :**
01. இ. பாரதிதாசன்
02. அ. புரட்சிக்கவிஞர்
03. இ. பன்றி
04. இ. சிலப்பதிகாரம்
05. ஆ. பாரதரத்னா
06. ஆ. இராமலிங்கர்

**பகுதி – 2 :**
07. இராமதாவதாரம்
08. சாலை. இளந்திரையன்
09. சேக்கிழார்
10. வேடிக்கையாக
11. மேடைப்
12. சிரவண பிதுர்பத்தி

**பகுதி – 3 :**
13. நாளிகேரம் - தென்னை
14. தலை - சிறப்பு
15. கவிகை - குடை
16. சேய - தொலைவு

**பகுதி – 4 :** (17 முதல் 20 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம்)

17. பெண்களின் அடிப்படைத் தேவைகள் யாவை?
18. உலகம் உருண்டை என்பதனை எந்த நூற்றாண்டுக்குப் பிறகு மேலை நாட்டினர் உறுதி செய்தனர்?
19. தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்?
20. முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை என்று கூறும் நூல் எது?

## பிரிவு – II – பகுதி – 1

21. ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.
22. நல்லொழுக்கம்
23. ✸ தலைமுடி தரையில் படும்படி கீழே விழுந்து வணங்கினான்.
    ✸ எழுந்து நின்று வணங்கி, உடலை வளைத்துக் கைகளால் வாயைப் பொத்தி அடக்கமாக நின்றான்.
24. வாழையிலை அரியச் சென்றபோது உள்ளங்கையில் பாம்பு கடித்து இறந்தான்.
25. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
26. அறிவில் சிறந்த பெரியோர்களைத் துணையாகக் கொண்டவர்க்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது.
27. அம்மானை, மறம், குறம், தூது

## பகுதி – 2

28. மூவாயிரம்
29. செய்திப்படங்கள் வாயிலாக உலக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே காணலாம்
30. யானைத் தந்தம், மயில்தோகை, வாசனைப் பொருள்கள்
31. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்
32. அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை
33. மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளி பெற வடலூர் சத்திய ஞானசபையில் சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். எனவே இவரைப் புதுநெறி கண்ட புலவர் எனப் பாரதியார் போற்றுகிறார்.
34. மேல்நிலைக்கல்வியில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

## பிரிவு – II – பகுதி – 1

35. **சிபி மன்னன்:** தன்னை நாடி வந்த புறாவின் துன்பத்தைப் போக்க தானே துலாக்கோலில் ஏறி நின்றான்.
**மனுநீதிச் சோழன்:** தன் அரண்மனையின் ஆராய்ச்சி மணி ஒலி கேட்டு பசுவிற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தனது ஒப்பற்ற மகனையே தன் தேர்ச்சக்கரத்தை ஏற்றி கொன்றான்.

36. கம்பர் எழுதியது கம்பராமாயணம்
வடமொழியில் வான்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழின் சுவை குன்றாமலும் மரபு மாறாமலும் கம்பர் எழுதியுள்ளார்.
கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. (பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தர காண்டம்)
இராமாயணத்தையும் திருக்குறளையும் தமிழுக்குக் கதி என்பர்.

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் பொன்னும் பவளமும் முத்தும் மாணிக்கமும் கூறப்படுகின்றன.
சான்றோர் ஒருவருக்கொருவர் தொலைவில் இருந்தாலும் தக்க சமயத்தில் ஒன்று சேர்வர்.
இதற்கு உவமையாய் மண்ணுக்கடியில் உள்ள பொன்னும், ஆழ்கடலில் கிட்டும் முத்தும் பவளமும், மலையில் கிட்டும் மணியும் ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவில் இருந்தாலும் அவை ஒன்று சேர்ந்து மாலையாய் (அணிகலன்) அமைவது கூறப்படுகிறது.

38. முகமது நபி மகிழ்ச்சியுடன் பாதையில் நடந்து வருவதைக் கண்ட புலி,
தனது வாலை வளைத்துக் கொண்டது. பெரிய தலையைத் தாழ்த்தியது
உடல் நடுக்கமுற்று மெல்ல மெல்ல நடந்து வந்தது
குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் திருவடிக் காட்சி கிடைத்ததென்று, பணிந்து வணங்கியது.

## பகுதி – 2

40. பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு இன்றியமையாதது.
பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது.
ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாரளமாய்க் கொடுக்க வேண்டும்.

41. அம்பேத்கரின் பிறப்பு: மராட்டிய மாநிலம் கொங்கண் மாவட்டத்தில் அம்பவாடே பிறந்த தேதி:14.04.1891
பெற்றோர்: தந்தை பெயர்: இராம்ஜி சக்பால் தாயார் பெயர்: பீமாபாய்
பெற்ற விருது: இந்திய அரசின் உயரிய விருது பாரத ரத்னா 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது

42. பேச்சை அழகுற முடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
கேட்பவர் மனதில் தம் கருத்தைப் பதியுமாறு பேச்சை முடித்தல்
பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல். உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல்
பாராட்டி முடித்தல். பொருத்தமான கவிதையைக் கூறி முடித்தல்

43. பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்கிறது திருக்குறள்
தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் போற்றப்படுகிறது
உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருத நிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டது
மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

44. அரிச்சந்திரன் நாடகம். உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரன்
அரிச்சந்திரனை பொய் பேச வைக்க, பல இன்னல்களை உருவாக்குகிறார் விசுவாசமித்திரர்
நாடு, மனைவி, மகன் ஆகியோரை இழப்பினும் பொய் சொல்லேன் என அரிச்சந்திரன் உறுதி
இந்நாடகம் வாயிலாக காந்தியடிகள் தாம் ஒரு சத்தியவானாக திகழ வேண்டும் என உறுதி பூண்டார்.

## பிரிவு – IV

45. அ. அரியாசனம் - சிங்காதனம், சிம்மாசனம் ஆ. பா + இனங்கள்
இ. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஈ. அரியாசனமுனக்கே, சரியாரும், திகழ், புகழ்
உ. தமிழ் விடு தூது

46. அ. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் ஆ. தொல்காப்பியர்
இ. பாணன், பாடினி, கூத்தன், விறலி ஈ. தாலாட்டு என்பது குழந்தையைத் தொட்டிலிட்டுப் பாடுவது
உ. ஒப்பாரி என்பது இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று இறந்தவரைப் பற்றிப் பாடுவது.

## பிரிவு – V பகுதி – 1

47. அ. 1. தன் இல்லத்திற்கு அமுதுண்ண திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் அழைத்தல். 2. தூய காய்கறிகளைக் கொண்டு அறுசுவை அமுது சமைத்தல். 3. விருந்து பரிமாற வாழையிலை அரிந்து வரை மூத்த திருநாவுக்கரசைப் பணித்தல் 4. வாழையிலை அரியும் போது பாம்பு ஒன்று மூத்த திருநாவுக்கரசை தீண்டுதல். 5. மூத்த திருநாவுக்கரசு இறந்ததை மறைத்து உணவு உண்ண திருநாவுக்கரசரை அழைத்தல். 6. திருநீறு அணிவிக்க மூத்த திருநாவுக்கரசை திருநாவுக்கரசர் அழைத்தல். 7. இப்போது இங்கு அவன் உதவான் - என அப்பூதியடிகள் உரைத்தல் . 8. உண்மை கூற திருநாவுக்கரசர் வற்புறுத்துதல் 9. உண்மை கூறுகிறார் அப்பூதியடிகள். 9. ஒன்றுகொலாம் எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பித்தல்.

48. அ. பேச்சின் முக்கூறுகள் - எடுத்தல் - தொடுத்தல் - முடித்தல். 1. தொடக்கம் அமையும் முறைகள் 2. பொருளை விரித்துப் பேசுதல் தொடுத்தல் 3. தொடுத்தல் முறைகள் 4. பேச்சை அழகுற முடிக்க வேண்டும். 5. முடித்தல் முறைகள்

ஆ. தோற்றம் - வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை இராமலிங்கர் நிறுவினார். நோக்கங்கள் - சாதி, சமய, இன வேறுபாடு கூடாது - கொல்லாமை - புலால் உண்ணாமை - எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணுதல் வேண்டும் - அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தல் - ஏழைகளின் பசியைப் போக்குதல்

## பகுதி – 2

49. அ. காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.

ஆ. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்

இ. நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே.

ஈ. மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.

தொடர்புக்கு... 7598868760, 9524302724, srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com